தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பு
Tamil Information Technology Association
Regd. No: N(A)879

18-10-2003

**செய்திக் குறிப்பு :**

## பொகவந்தலாவவில் கிராமிய தகவல் தொழில்நுட்ப நிலையம் திறந்துவைப்பு

தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பு (TITA) கடந்த வருடம் நவம்பர் மாதம் ஆரம்பித்திருந்த கிராமிய தகவல் தொழில்நுட்பச் செயற்றிட்டத்தின்கீழ் மலையகத்தில் அதன் முதலாவது கிராமிய தகவல் தொழில்நுட்ப நிலையத்தை சென்ற 18ஆம் திகதி, சனிக்கிழமை பொகவந்தலாவவில் திறந்து வைத்துள்ளது. இச்செயற்றிட்டத்தின் கீழ் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஏற்கெனவே இத்தகைய 10 கிராமிய தகவல் தொழில்நுட்ப நிலையங்களை TITA அமைப்பு திறந்து வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையங்கள் தமிழ் பேசும் மக்களின் கிராமப் பகுதிகளில் வசதி குறைந்த மாணவர், இளைஞர்களிற்கு கணினி, தகவல் தொழில்நுட்பத் துறைகளில் அடிப்படை அறிவை ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டு திறந்து வைக்கப்படுவதாக TITA அமைப்பு தெரிவித்துள்ளது.

பெரும்பாலும் வெளிநாடுகளில் வாழும் புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புக்களின் உதவியுடன் திறந்து வைக்கப்படுகின்ற இந்நிலையங்களில் அநேகமானவை தலா மூன்று கணினிகளுடன் ஆரம்பிக்கப்பட்டு, காலப்போக்கில் படிப்படியாக விருத்தி செய்யப்பட்டு வருகின்றன. இந்த வகையில், கனடிய பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த தமிழ் மாணவர்களால் முன்னெடுக்கப்படும் மாணவர் தொண்டர் செயற்றிட்டம் (The Student Volunteer Program – www.tsvp.ca) எனும் அமைப்பினால் இம்மாத ஆரம்பத்தில் TITA அமைப்பின் மேற்படி கிராமிய தகவல் தொழில்நுட்பச் செயற்றிட்டத்திற்கென நன்கொடையாக அனுப்பி வைக்கப்பட்டுள்ள 11 கணினிகளில் 3 கணினிகள் பொகவந்தலாவ கிராமிய தகவல் தொழில்நுட்ப நிலையத்திற்காக TITA அமைப்பினால் ஒதுக்கப்பட்டுள்ளன. ஏனைய கணினிகளுள் மேலும் 3 கணினிகளைக் கொண்டு வவுனியாவில் மேலுமோர் நிலையத்தைத் திறந்து வைப்பதற்கும் நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டு வருவதாக TITA அமைப்பு தெரிவித்துள்ளது. ஏனைய கணினிகள் ஏனைய 10 கிராமிய தகவல் தொழில்நுட்ப நிலையங்களிற் சிலவற்றை மேலும் விருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ளன. கிராமிய தகவல் தொழில்நுட்ப நிலையச் செயற்றிட்டம் தொடர்பான மேலதிக தகவல்களை TITA அமைப்பின் இணையத்தளமான www.tamilita.org இல் பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பம்:

(P. கண்ணன்,
ஒருங்கிணைப்பாளர்,
பொகவந்தலாவ கிராமிய தகவல் தொழில்நுட்ப நிலையம்)

TITA, Saraswathy Hall, No.75, Lorenz Road,
Colombo-04, Sri Lanka.
Web: www.tamilita.org

Voice: +94-777-271467
+94-777-780304
Email: admin@tamilita.org